செ.வெ.எண்: 62 நாள்: 26.02.2020

**தூத்துக்குடி மாவட்டம் சுப்பையா வித்யாலயம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேசிய பசுமைப்படை சார்பில் காற்று மாசுபாடு தொடர்பாக விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் சுப்பையா வித்யாலயம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேசிய பசுமைப்படை சார்பில் காற்று மாசுபாடு விழிப்புணர்வு பேரணி இன்று (26.02.2020) நடைபெற்றது. தூத்துக்குடி கல்வி மாவட்டத்திற்குட்பட்ட 13 பள்ளிகளை சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்ற பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த பேரணியானது சுப்பையா வித்யாலயம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் துவங்கி, பாளையங்கோட்டை ரோடு வழியாக குரூஸ் பர்னாந்து சிலை வரை சென்று, பாலவிநாயகர் கோவில் வழியாக மீண்டும் பள்ளிக்கு வந்து நிறைவடைந்தது. பேரணியில் மாணவ, மாணவிகள் காற்று மாசுபடுதல் பற்றிய விழிப்புணர்வு கொண்ட பதாகைகளை ஏந்தி சென்றனர். மேலும், காற்று மாசுபடுதலினால் ஏற்படும் தீமைகள், நோய்கள் மற்றும் சுற்றுசூழல் கேடுகளைப் பற்றி முழக்கங்களை எழுப்பி, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்பபுணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற செயல்பாடுகளை மத்திய அரசு தூய்மை செயல் திட்டம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு சுற்றுச்சூழல் மற்றும் பள்ளி கல்வித்துறையும் இணைந்து சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்
தேசிய பசுமைப்படை மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. இந்த பேரணி மூலம் பொதுமக்களிடையே காற்று, தண்ணீர் மற்றும் ஒளி மூலம் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக விழிப்பணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இந்த வாரத்தில் ஒவ்வொரு பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள தேசிய பசுமைப்படை மாணவ, மாணவியர்களை ஈடுபடுத்தி மரம் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் பள்ளி அளவில் மாணவ, மாணவியர்களிடையே மாசு கட்டுப்பாடு தொடர்பாக விழிப்புணர்வு போட்டிகள் நடத்தப்பட்டு வழங்கப்பட உள்ளது. தூத்துக்குடி விமான நிலையத்தின் மூலம் சமூக பொறுப்பு நிதி மூலம் ரூ.1 கோடி மதிப்பில் அரசு புறம்போக்கு நிலங்களில் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், மீன் ஆராய்ச்சி கல்லூரி அருகில் 50 ஏக்கர் பரப்பளவில் பயோ டைவர்சிட்டி பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்செந்தூர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம் திறப்பு விழாவில் பயோ டைவர்சிட்டி பூங்கா பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். ஒவ்வொரு மாதமும் மாசு கட்டுப்பாடு தொடர்பாக அலுவலர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு மாசு கட்டுபாட்டின் அளவினை கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், தூத்துக்குடி மாநகராட்சி மூலம் மாசு கட்டுபாடு தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு விதித்துள்ள விதிமுறைகளை தொழில் நிறுவனங்கள் முறையாக கடைபிடித்து மாசு இல்லாத மாவட்டமாக மாற்றிட முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.அ.ஞானகௌரி, தூத்துக்குடி கல்வி மாவட்ட அலுவலர் திருமதி.இ.வசந்தா, தூத்துக்குடி மாவட்ட பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் திரு.வெள்ளைச்சாமி, தூத்துக்குடி மாவட்ட சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் திரு.பென்சர், சி.வ. அரசு மேல்நிலைப்பள்ளி தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் திரு.அருள்சகாயம் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**